ராணி
காமிக்ஸ்
துப்பறியும் நிபுணர் ரிப்கெர்பி தோன்றும்
வீராயோ
வைர நெக்லஸ்

ராணி காமிக்ஸ்–157
(மாதம் இருமுறை இதழ்)
ஜனவரி 1–15
1991

வாராயோ வைர நெக்லஸ்

இவர்தான் துப்பறியும் நிபுணர் ரிப்கெர்பி துப்பறிவதில் ஒரு புரட்சியே ஏற்படுத்தியவர். அவருடன் இருப்பது டெஸ்மான்ட். இவர் ரிப்கெர்பியின் சமையல காரர் மட்டுமல்ல, உதவியாளரும் கூட. சமையல்காரர் சங்கத்தின் தலைவர் பதவியை டெஸ்மான்ட்டுக்குக் கொடுத்திருந்தார்கள். பதவி ஏற்பு விழாவுக்கு செல்லத்தான் இந்த அலங்காரம் நடந்து கொண்டிருந்தது.

டெஸ்மான்ட் கூட்டத்திற்கு புறபபட்டாா.
போகலாமா? அனைவரும் வந்து இருப்பார்கள்.
கிளம்பலாம் சார்!

ஓர் அறையில்—
மெர்லின்! அவன் பெயர் டெஸ்மான்ட். ரிப்கெர்பியின் உதவியாளர்! அவனை எப்படியாவது நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்!
அவ்வளவு தானே!

மெர்லின்! சமையல்காரர் சங்கத்துக்கு தலைவன்! அதனால் இங்கே நடக்கும் கமிட்டி கூட்டத்திற்கு டெஸ்மான்ட எப்படியும் வருவான்!
அப்பொழுது அவனை மடக்கி விடலாம்!
இருவரும் இரகசியத் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார்கள்.

அவனை உன் சக்தியால் வசியப்படுத்திவிடு! அப்புறம் அவன் மூலமாக நம் இரகசியங்களை ரிப்கெர்பியிடம் கறந்து விடலாம்!

இன்று என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். தலைவர் பதவி என்னைத் தேடி வந்திருக்கிறது!
டெஸ்மான்ட் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.
ரிப்கொர்பி வீட்டில்–
லாக்கரில் இருக்கும் கிறிஸ்டோபர் பற்றிய இரகசியங்கள் மிகவும் முக்கியமானவை!
லாக்கரை திறந்து அதை வெளியே எடுத்தார்.
கருந்த ஆதாரத்தோடு கிறிஸ்டோபரை கையும் களவுமாக பிடிக்க வேண்டும்!
அங்கே–
ரிப்கெர்பியின் வீட்டுக்குள் நுழைய முடியுமா?
நீ ஏன் போகப் போகிறாய்! நமக்குத்தான் டெஸ்மான்ட் இருக்கிறானே!
டெஸ்மான்ட்டை மட்டும் நீ வசியப்படுத்தி விட்டால் வெற்றி நமக்குத்தான்!
கவலை வேண்டாம் கிறிஸ்டோபர்!
மெர்வின் கையில் கேமிராவுடனும் தோளில் பையுடனும் புறப்பட்டான்.

கமிட்டி கூட்டத்தில்-
நீங்கள்தான் புதிய தலைவர் டெஸ்மான்ட்டா?
ஆமாம்? என்ன விசயம்!
நான் துணைத் தலைவர்!
நான் "சர்வர்ஸ் டைம்ஸ்" பத்திரிகை நிருபர். உங்களை பேட்டி காண வந்திருக்கிறேன். தயவு செய்து போட்டோவுக்கு போஸ் கொடுங்கள் சார்!
மெர்லின் நிருபராக மாறியிருந்தாள்.
மிக்க மகிழ்ச்சி...! உங்கள் பெயர்!
மெர்லின்!
என்னையும் ஒரு போட்டோ எடுங்களேன்!
மன்னிக்கனும். தலைவர் டெஸ்மான்ட்டைத்தான் பேட்டி காண வந்திருக்கிறேன்!
தலைவரை பேட்டி எடுக்கும் போது துணைத் தலைவரையும் பேட்டி எடுத்தால் என்ன?
மெர்லின் நான் ரெடி! படம் எடுக்கலாம்!
கொஞ்சம் பொறுங்கள்! காமிராவை சரி செய்து கொள்கிறேன்!

உங்களைப் பற்றி விரிவாக எழுத இருப்பதால் நிறைய படங்கள் எடுக்க வேண்டும் சார்!
இந்நேரம்— மெர்லின் தன் வேலையை தொடங்கி யிருப்பாள்!
கிறிஸ்டோபர் மகிழ்ச்சியாக இருந்தான்.
சார்! உங்களை தனியாக பேட்டி காண வேண்டும்!
ஓ.கே.! தனியாக போய்விடு வோம்!
ஒரு பெரிய நாடகம் அரங்கேறிக் கொண்டிருந்தது.
படம் எடுக்கப் போகிறேன்! இங்கே பாருங்கள்!
மெர்லின் புத்திசாலிப் பெண்! டெஸ்மான்ட்டை படம் பிடித்திருப்பாள்!
அவனை வைத்துத்தான் என் எதிர்கால திட்டத்தையே தீட்டப் போகிறேன்!

என்ன மெர்லின்! உன் காமிரா விளக்கொளி இப்படிக் கண்ணைக் கூசுகிறது!
முதலில் அப்படித்தான் இருக்கும்! போகப் போக எல்லாம் சரியாகி விடும்!
முதலில் நீங்கள் அணிந்திருக்கும் கடிகாரத்தை கழற்றி கொடுங்கள்!
ஏன் கடிகாரத்தை கேட்கிறாய்!
கொடுங்கள்! போகப் போக நீங்களே புரிந்து கொள்வீர்கள்!
டெஸ்மான்ட் கடிகாரத்தை கழற்றிக் கொடுத்தார்.
சற்று நேரம் அமைதியாக இருங்கள்! கண்கள் விளக்கொளி கூச்சத்தில் இருந்து விடு படட்டும்!
இப்போது உங்கள் கடிகாரத்தை பாருங்கள்!
டெஸ்மான்ட் கண்களுக்கு கடிகாரம் நான்காக தெரிந்தது.

டெஸ்மான்ட்! நன்றாக பாருங்கள்!
நான் சொல்வதைக் கேளுங்கள்! நீங்கள் எப்பொழுதும் தூக்கத்தில் இருக்க வேண்டும்! என் சொல்லுக்கு கட்டுப்பட வேண்டும்!
மெர்லின் டெஸ்மான்ட்டை வசியப்படுத்தினாள்.
நான் சொல்கிறபடி செய்ய வேண்டும். வீட்டுக்குப் போனதும்...!
ரிப்கொர்பியின் லாக்கரை திறந்து, கிறிஸ்டோபர் பற்றிய இரகசிய குறிப்புகளை வெளியே எடுக்க வேண்டும்!
பிறகு நான் சொல்கிற எண்ணுக்கு போன் செய்து குறிப்பைப் படிக்க வேண்டும்!
டெஸ்மான்ட் இன்னுமா படத்திற்கு போஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்! அவரைப் போய் அழைத்து வர வேண்டும்!
துணைத் தலைவர் எட்வர்டு டெஸ்மான்ட்டை தேடிவந்தார்.

நான் சொல்வதை மறந்து விடாதே! போன் செய்யும் பொழுது அடுத்த வேலையை சொல்லு கிறேன்!
டெஸ்மான்ட் மயக்கத்தில் இருந்தார்.
டெஸ்மான்ட் பெரிய விளம்பரப் பிரியராக இருக்கிறாரே!
ரிப்கெர்பி வீட்டில்—
கிறிஸ்டோபரை பற்றி இன்னும் சில தடயங்கள் கிடைத்ததும் அவனை மடக்கிவிடலாம்! அதுவரை இங்கேயே இருக்கட்டும்!
டெஸ்மான்ட் அந்த இரகசிய குறிப்பை எப்படி யாவது எடுத்துக் கொடுத்துவிட வேண்டும்!
சரி! மாய உலகில் இருந்தது போதும்! சுயநினைவுக்கு வாருங்கள்!
டெஸ்மான்ட் சுய நினைவுக்கு வந்தார்.
அடப்பாவமே! படம் எடுப்பதற்குள் இப்படித் தூங்கி வழிகிறாரே!

டெஸ்மாண்ட்டை நினைத்தால் சிரிப்பாகத்தான் இருக்கிறது!
என் படங்கள் எப்பொழுது வரும்!
விரைவில் வரும்! இந்தாருங்கள் உங்கள் கடிகாரம்!
போய் கமிட்டி கூட்டத்தில் கலந்து கொள்ளுங்கள்!
புத்தகம் அச்சானதும் எடுத்து வருகிறேன்!
மெர்லின் விடைபெற்றுச் சென்றாள்.
டெஸ்மாண்ட்! ஏன் இவ்வளவு நேரம்! வாருங்கள் நடனம் ஆடலாம்!
ஓ.கே.! வாருங்கள் போகலாம்!

டெஸ்மான்ட் ஒரு பெண்ணுடன் சேர்ந்து நடனமாடினார்
மெர்வின்! காரியத்தை கச்சிதமாக முடித்து விட்டாயா?
முடித்துவிட்டேன்! டெஸ்மான்டிடம்இருந்து விரைவில் நல்ல தகவல் வரும்!
டெஸ்மான்ட் ஏதும் முரண்டு பிடித்தானா?
இல்லையே! எளிதில் வசியம் பண்ணி விட்டேன்! போன் நம்பர் கொடுத்திருக்கிறேன்! பேசுவான்!
டேப்ரிக்கார்டரில் வேண்டுமானால் நாம் பதிவு செய்து கொள்ளலாம்!
ரிப்கெர்பி வீட்டில்—
என்ன டெஸ்மான்ட் நிகழ்ச்சி எப்படியிருந்தது?
எதிர்பார்த்ததைவிட மிகவும் அருமையாக இருந்தது சார்!

சார்! சற்று களைப்பாக இருக்கிறது! நான் ஓய்வெடுத்துக் கொள்ளலாமா?
தாராளமாக! நானும் படுக்கப் போகிறேன்!
நகரே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது.
திடீரென்று டெஸ்மாண்ட் ஏதோ கட்டளைக்கு உட்பட்டவர் போல எழுந்து உட்கார்ந்தார்.
ஆனால் ரிப்கெர்பி அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்.
டெஸ்மாண்ட் எழுந்து உடையை மாற்றிக்கொண்டார்.
நேராக ரிப்கெர்பியின் லாக்கர் இருக்கும் இடத்திற்கு வந்தார்.
லாக்கரைத் திறக்க-எண்களை சுழற்றினார்.

மெர்லின் கட்டளைப்படியே டெஸ்மான்ட் நடந்து கொண்டார். லாக்கரை திறந்து கிறிஸ்டோபரின் இரகசிய குறிப்பில் முதல் பக்கத்தை மட்டும் எடுத்து தனியே வைத்துக்கொண்டார்.
மீதியை லாக்கரில் வைத்துவிட்டு கைரேகையை அழித்தார்.
வீட்டைவிட்டு வெளியேறி டெலிபோன் பூத்தை நோக்கி,போனார்.
டெஸ்மான்ட டாகத்தான் இருக்கும்.
டிரிங்... டிரிங்...
அவன் பேச்சை டேப்பில் பதிவு செய்து விடுவோம்!

இரகசிய குறிப்பின் முதல் பக்கத்தில்...!
வசிய மயக்கத்தில் இருந்த டெஸ்மான்ட் இரகசிய குறிப்பை படித்தான்.
கொள்ளைக்காரன், கொலைகாரன் என்று அனைத்தையும் படித்தார்.
உலகிலேயே மிகப் பெரிய குற்றவாளி கிறிஸ்டோபர். அவன் ஒரு நம்பிக்கைத் துரோகி,
ரிப்கெர்பி என்னை சரியாகவே எடை போட்டிருக்கிறார்!
எல்லா வற்றையும் டேப்பில் பதிந்து விட்டேன்!
அப்போது அவ்வழியே போலீசாரின் கார் வந்தது.
இந்நேரத்தில் டெலிபோன் பூத்துக்குள் யாரது?
யாராவது போன் பேசிக் கொண் டிருப்பார்கள்!
முதல் பக்கத்தில் அவ்வளவு தான்!
ஓ.கே.! நாளை இரவு இரண்டாவது பக்கத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும்! போனை வைத்துவிடு!
மெர்லின் கட்டளையிட்டாள்.
கட்டளைக்கு அடிபணிந்த டெஸ் மான்ட் போனை வைத்து விட்டு இறங்கி நடந்தார்.

ஏய்...! யார் நீ? நடுச்சாமத்தில் உனக்கு என்ன வேலை!
போலீசார் அவரை மறித்தனர்.
தூக்கத்தில் நடந்து செல்கிறார் என்று நினைக்கிறேன்!
இது ரிப்கெர்பியின் உதவியாள ராச்சே!
டெலிபோனில் பேப்பரை படித்து ஏதோ சொன்னது மாதிரியல்லவா இருந்தது!
ஆமாம்! வீட்டுக்கு ஒழுங்காக போய் சேர்ந்து விடுவாரா?
டெஸ்மாண்ட் எதையும் கண்டு கொள்ளாமல் வீட்டை நோக்கி நடந்தார்.
வீட்டுக்குள் வந்ததும், ரிப்கெர்பியின் லாக்கரை மீண்டும் திறந்தார்.

குறிப்பின் முதல் பக்கத்தை எடுத்த இடத்தில் வைத்து விட்டு, படுக்கையில் படுத்தார்.
மறுநாள் காலை—
என்ன டெஸ்மான்ட்! இரவில் தூங்க வில்லையா?
சரியான தூக்கம் இல்லை சார்!
அதிகாலையில் தான் தூங்கினேன்! ஏதோ ஒன்று மனதை வாட்டி வதைக்கிறது. உடல் கூட அடித் துப் போட்டது போலிருக்கிறது!
எதையாவது நினைத்து மனதை ஏன் குழப்பிக் கொள்கிறாய்!
அப்படியொன்றும் இல்லை சார்! தவறு நடந்து விடுமோ என்று அஞ்சுகிறேன்!

ஏன் இப்படி பிதற்றுகிறாய்! நீ அப்படியொன்றும் தவறான பாதைக்கு செல்ல மாட்டாய்! தைரியமாக இரு!
ஓ.கே. சார்!
கிறிஸ்டோபரை குற்றவாளி என்று நிரூபிக்க சில தகவல் கள் வேண்டும்! முடிந்தவுடன் நாம் ஓய்வெடுக்கச் சென்று விடலாம்!
அன்று இரவு– வசிய சக்தி டெஸ் மாண்ட்டை உசுப்பியது. ரிப்கொர் பியின் லாக்கரை திறந்தார்.
கிறிஸ்டோபர் பற்றிய குறிப்பின் இரண்டாம் பக்கத்தை எடுத்தார்.
திருமதி கிளாராவின் வைர நெக்லஸை திருடியதும் இந்த கிறிஸ்டோபர் தான் என்று தெளிவாக இருக்கிறது!
பிறகு மெர்லினுக்கு போன் செய்து தகவல் சொன்னார்.

ரிப்கொர்பி சரியான பேர் வழிதான்! நான் வைர நெக்லஸ் திருடியதையும் கண்டுபிடித்து விட்டான்!
ரிப்கொர்பி உங்கள் வீட்டை சோதனை போட்டு நெக்லசை எடுக்க இருக்கிறார்! விரைவில் நீங்கள் அகப்படலாம்!
மெர்லின் நாம் டெஸ்மாண்ட்டை உடனே சந்திக்க வேண்டும்! ஏற்பாடு செய்!
சரி போனைக் கொடுங்கள்! அவரை அங்கேயே காத்திருக்கச் சொல்கிறேன்!
டெஸ்மாண்ட்டை சந்திக்க இருவரும் காரில் ஏறி பறந்தார்கள்.
ரிப்கொர்பி என்னை பிடிக்க ஒரு பெரிய வலையே விரித்து வைத்திருக்கிறார்! நான் அதில் மாட்டிக் கொள்ளகூடாது!
கவலை வேண்டாம்! என் வசிய சக்தி இருக்கும் வரை யாரும் உங்களை நெருங்க முடியாது!
ரிப்கொர்பி என்னை பிடிக்கக் கூடாது! அதற்குப்பதிலாக போலிசில் சிக்க வைக்க வேண்டும்!

டெஸ்மான்ட்! உன்னால் ஒரு வேலையாக வேண்டும்!
சொல்லுங்கள். காத்திருக்கிறேன்!
இந்த வைர நெக்லசை வைத்து ரிப்கெர்பியின் கொட்டத்தை அடக்கிவிடுவேன்! அதன்பிறகு என் தலை கப்பிவிடும்!
கிறிஸ்டோபர் காரிலேயே அமர்ந்திருந்தான்.
ரிப்கெர்பியிடம் ஒரு முக்கிய வேலை யிருக்கிறது!
சொல்லுங்கள்! முடித்து விடுகிறேன்
இந்த வைர நெக்லசை வைத்துத்தான ரிப்கெர்பியின் தலையெழுத்தை மாற்றப் போகிறேன்! அதற்கு உன் உதவி தேவை!
ஓ.கே.!
இந்த வைர நெக்லசை ரிப்கெர்பியின் லாக்கரில் அவருக்கே தெரியாதபடி மறைத்து வைத்துவிட வேண்டும்!

ரிப்கொர்பி என்னை மாட்டிவைக்க பார்க்கிறானா? நான் எப்படிப்பட் டவன் என்று அவன் விரைவில் புரிந்துகொள் வான்!
சரி, நீ போகலாம்! சொன்னது நினைவில் இருக்கட்டும்!
கச்சிதமாக முடித்துவிடு கிறேன்!
சுயநினைவை இழந்த டெஸ்மான்ட் மெர்லின் கட்டளைக்கு உட்பட்டான்.
வைர நெக்லசை ரிப்கொர்பியின் லாக்கரில் வைக் கச் சொல்லி விட்டாயா?
ஆமாம்! எப்படியும் வைத்து விடுவார்!
மெர்லின் சொன்னதுபோலவேடெஸ் மான்ட் நெக்லசை ரிப்கொர்பியின் லாக் கரில் மறைத்து வைத்தார்.
மறுநாள்—
டெஸ்மான்ட்! நான் கமிஷனரை அழைத்துக்கொண்டு கிறிஸ்டோபரை கைது செய்யப் போகிறேன்!
அப்படியா! ரொம்ப மகிழ்ச்சி சார்!

கமிஷனர் அலுவலகம்-
சார் திருமதி கிளாராவின் வைர நெக்லசை கண்டுபிடித்துவிட்டேன்! அது கிறிஸ்டோபரிடம்தான் இருக்கிறது!
அப்படியா?
கிறிஸ்டோபரிடம் இருக்கிறது என்று உறுதி செய்துவிட்டீர்களா?
ஆமாம் சார்! சந்தேகம் வேண்டாம்!
சரி வாருங்கள்! கிறிஸ்டோபர் வீட்டை சோதனை போடலாம்!
என் பொறியில் இப்போதுதான் விழுந்திருக்கிறான்!
கமிஷனரும், ரிப்கெர்பியும், கிறிஸ்டோபர் வீட்டை சோதனை போட காரில் புறப்பட்டார்கள்.
வாருங்கள்! ஏது இவ்வளவு தூரம்! உதவி எதுவும் வேண்டுமா?
உதவி கேட்டு வரவில்லை மிஸ்டர்! உங்கள் வீட்டை சோதனை போட வந்திருக்கிறோம்!
உண்மையாகவா...!

எதற்காக என்று தெரிந்து கொள்ள லாமா?
ஸொராவின் வைர நெக்லஸ் உங்கள் வீட்டில் இருக்கிறது!
வைர நெக்லசா? என் வீட்டிலா...! யார் சொன்னது?
ஏமாற்றப் பார்க்கிறான்! விட்டு விடக்கூடாது!
நான் எதற்கு மறைத்து வைக்கிறேன்! வேண்டுமானால் லாக்கரை திறக்கிறேன் பாருங்கள்!
சார்! முதலில் லாக்கரை பார்த்துவிடு வோம்!
லாக்கர் மட்டுமல்ல! வீடு முழுக்க தேடுவோம்!
அதேநேரம் ரிப்கொர்பி வீட்டில்—
இந்த பேப்பர் எப்படி குப்பைக் கூடைக்கு வந்தது! நான் போட வில்லையே!
கிறிஸ்டோபர் அவசரப்படாதீர்கள். இன்னும் சோதனை முடியவில்லையே?
லாக்கரைப் பார்த்துவிட்டீர்களா? வைர நெக்லஸ் இருக்கிறதா? எவனோ சொன்னான் என்று நீங்களும் வந்துவிட்டீர்களே!

அரை மணி கழித்து—
நீங்கள் என் நேரத்தை வீணாக்கி விட்டீர்கள்!
நெக்லஸ் இங்கு இல்லை! அப்படியானால் வேறு எங்கு போயிருக்கும்!
வேறு யாரோ இரகசியமாக மறைத்து வைத்திருக்கலாம்!
ஆனால் வேண்டும் என்றே ரிப்கெர்பி என்னை சந்தேகிக்கிறார்!
ரிப்கெர்பி, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்!
சார்! இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது! விரைவில் கண்டு பிடிக்கிறேன்!
சே! என்னை அவமானப்படுத்தி விட்டீர்கள்!
ஏய்... கெர்பி! என் வீட்டை சோதனை போட்டாயே!. முதலில் உன் லாக்கரை சோதனை போட்டாயா? நெக்லஸ் ஏன் உன்னிடம் இருக்கக்கூடாது!

நெக்லஸ் என் லாக்கரிலா? அது எப்படி இருக்க முடியும்?
ஏன் இருக்கக்கூடாது! பணம் யாரை விட்டது!
நீயே அதை திருடி உன் லாக்கரில் மறைத்து வைத்துவிட்டு பெயருக்கு என்னை சோதனை போடுகிறாய்!
உன் வீட்டையும் சோதனை போட வேண்டும்!
தாராளமாக போடலாம்!
கிறிஸ்டோபர், கமிஷனர், ரிப்கொர்பி மூவரும் வீட்டுக்கு வந்தார்கள்.
ரிப்கொர்பி! இது தேவையில்லாதது! நேரம் போவதுதான் மிச்சம்!
இல்லை சார்! கண்டிப்பாக சோதனை போட்டே தீர வேண்டும்!
வா! உன் அசைப்படியே நடக்கட்டும்!

என்ன சார்! அதற்குள் வந்து விட்டீர்கள்!
அலோ டெஸ்மான்ட்! எங்களுக்கு ஒரு சின்ன வேலையிருக்கிறது!
ரிப்கொர்பி லாக்கரை திறந்து காட்டினார்.
இந்தாருங்கள் சார்! தாராளமாக சோதனை போடலாம்!
முக்கிய இரகசிய தஸ்தாவேஜுக்கள் எல்லாம் இருக்கிறது என நினைக்கிறேன்! மேலோட்டமாகவே பார்க்கிறேன்!
இல்லை சார்! முழுவதையும். வெளியே அள்ளிப் போட்டு பாருங்கள்!
நெக்லஸ் ஒன்றும் இல்லையே! இது என்ன? ஏதோ ஒன்று தட்டுப் படுகிறது!
அதை வெளியே எடுத்துப் பார்த்த கமிஷனர் அதிர்ந்தார்.
என்ன இது!
ஆ...!
இது எப்படி இங்கே வந்தது!
அதையேதான் சார் நானும் கேட்கிறேன்!
நெக்லசைப் பார்த்ததும் ரிப்கொர்பி திடுக்கிட்டுப் போனார்.

எங்களைக் கேட்டால்... நீ எடுத்துவிட்டு பழியை என்மேல் போடப் பார்க்கிறாயா?
இது எப்படி இங்கே வந்தது! எனக் கொன்றும் புரிய வில்லையே!
ரிப்கெர்பி! இது கிளாராவின் நெக்லஸ்தானே!
அதுபோலத்தான் தெரிகிறது! ஆனால் இது எப்படி என் லாக்கருக்குள் வந்தது?
நெக்லஸ் திருட்டுப் போய் ஒரு வாரம் ஆகிவிட்டது! எப்படி என் லாக் கருக்குள்...!
திருடிவிட்டு பழியை கிறிஸ்டோபர் மேல் போட்டு சோதனை வேறு போடச் சொல்லிவிட்டாய்!
சார்! இவன் ஒரு கொள்ளைக்காரன் முதலில் இவனை கைது செய்யுங்கள்!
கிறிஸ்டோபர் ஆத்திரப்பட்டு பேசினான்.

கிறிஸ்டோபர் பொறுமையாய் இருங்கள்! எதற்கும் திருமதி. கிளாராவிடம் ஒரு வார்த்தை கேட்டுக் கொள்ளலாம்!
ஏன் தயங்குகிறீர்கள்! அதுதான் நிரூபணம் ஆகிவிட்டதே!
நெக்லஸை கண்டுபிடித்து கொடுத்ததற்கு ரொம்ப நன்றி!
பரவாயில்லை சார்!
ஏய்... டெஸ்மான்ட்! உன் எஜமானரைப் பார்த்தாயா? நெக்லஸை அபேஸ் பண்ணப் பார்க்கிறார்!
ஏய்... கெர்பி! போலீசுடன் தொடர்பு இருந்தால் நம்மை யாரும் சந்தேகப் பட மாட்டார்கள் என்று நினைத்துவிட்டாயா!
ஓ.கே. ரிப்கெர்பி! நான் இனி என் கடமையைச் செய்ய வேண்டும்! வாருங்கள் வந்து வாக்குமூலம் கொடுங்கள்!
ஓ.கே. சார்!

ரிப்கெர்பி கண்டுபிடிப்பாக இதை செய்திருக்க மாட்டார்! ஏதோ சதி நடந்திருக்கிறது!
இரவு நடந்தது எதுவுமேடெஸ்மாண்ட்டுக்கு நினைவில்லை.
கமிஷனர் ஒளாராவுடன் தொடர்பு கொண்டு பேசினார்.
அப்படியானால் நடந்ததை பெரிதுபடுத்த வேண்டாம் என்று சொல்கிறீர்கள்!
ஓ.கே. மேடம்!
கெர்பி! நான் நெக்லசை ஒளாராவிடம் கொடுத்துவிட்டு வருகிறேன்! நீங்கள் கிறிஸ்டோபரை இரகசியமாக கண்காணியுங்கள்!
ஓ.கே. சார்!
கெர்பி தெருவில் இறங்கி, நடந்து வந்தார்.
இந்தக் கேசை எப்படியும் கண்டுபிடித்தே தீரவேண்டும்!
நேற்று பார்க்கும்பொழுது லாக்கரில் நெக்லஸ் இல்லை! இரவில்தான் யாரோ வைத்திருக்கிறார்கள்! யாராக இருக்கும்?
வழியில்–
அலோ சார்! டெஸ்மாண்ட் இப்பொழுது எப்படியிருக்கிறார்!
டெஸ்மாண்ட்டா! அவனுக்கென்ன நன்றாகத்தானே இருக்கிறான்!

நேற்று இரவு டெஸ்மான்ட் தூக்கத்தில் நடந்து சென்றான். நாங்கள் சந்தேக வழக்கில் கைது செய்ய முயன்றோம்! உங்களுக்காக விட்டு விட்டோம்!
என்ன நடந்தது?
இரவில் தூக்கத்தில் நடந்து சென்றானா? நிச்சயமாக இருக்காது!
இல்லை கெர்பி! நாங்கள் இருவரும் பார்த்தோமே!
நாங்கள் கூப்பிட கூப்பிட கவனிக்காதது போல சென்று விட்டான்!
திருடன் போலவே உடை உடுத்தியிருந்தான்!
ரிப்கெர்பிக்கு அதைக் கேட்க ஆச்சரியமாக இருந்தது.

எதற்கும் அவன் மீது ஒரு கண் வைத்திருங்கள், சார்!
ஓ.கே.! நான் அவனை பார்த்துக்கொள்கிறேன்! தகவல் கொடுத்த தற்கு மிக்க நன்றி!
டெஸ்மான்ட் நேற்று இரவு கமிட்டி கூட்டத்துக்கு போய் விட்டுத்தானே வந்தான்!
கொர்பி வீட்டுக்கு வந்தார்.
எல்லாம் நல்லபடியாக முடிந்ததா சார்!
ஆமாம் டெஸ்மான்ட்!
முதலில் இந்த காபியை குடியுங்கள்! தெம்பாக இருக்கும்!
நன்றி டெஸ்மான்ட்! நீயும் குடி!
வேண்டாம் சார்!
ஆ....!
என்ன டெஸ்மான்ட்!
விரல்களில் திடீரென்று உணர்ச்சி இல்லாதது போல தெரிகிறது சார்!

ஏன்? திடீரென்று கைக்கு என்ன வந்துவிட்டது!
தெரிய வில்லையே!
கையில் காயங்கள் கூட எதுவும் இல்லை!
என் லாக்கரை எப்பொழுதாவது திறந்திருக் கிறாயா?
சார்! இன்னொருதடவை அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்!
டெஸ்மான்ட் உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? சும்மா கேட்டேன்!
நல்லவேளை! நான் பயந்தே போய் விட்டேன்!

இருந்தாலும், எனக்கு ஒரு சந்தேகம்! இரவில் தூக்கத்தில் எழுந்து நடக்கிறாயாமே!
சார்! வந்...து...
உண்மையைச் சொல்! வைர நெக்லசை நீதானே என் லாக்கரில் வைத்தாய்!
கொர்பி ஓங்கி ஒரு அறை கொடுத்தார்.
டெஸ்மான்ட்! துரோகிகளுக்கு துணை போய் என் பெயரை கெடுத்து விட்டாயே!
அப்பொழுது சமையல்காரர் சங்கத்தின் துணைத் தலைவர் எட்வர்டு வந்தார்.
என்ன சார்! என்ன நடந்தது?
ஒன்றும் இல்லை! டெஸ்மான்ட்டுக்கு சிறிது ஓய்வு தேவை!
டெஸ்மான்ட்டை படுக்க வைத்தார்கள்
பத்திரிகை பேட்டியா? என்ன நடந்தது? விவரமாக சொல்!
பத்திரிகையில் பேட்டி வர ஆசைப்பட்டதின் விளைவுதான் இது!
"சர்வர் டைம்ஸ்"சின் பெண் நிருபர் டெஸ்மான்ட்டை நிறைய போட்டோ எடுக்கிறேன் என்று சொல்லி டெஸ்மான்ட்டை வசியம் பண்ணிவிட்டாள் என்று நினைக்கிறேன்!

சார்! இந்த பாட்டிலில் உள்ள மருந்தை நுகர்ந்தால் டெஸ்மாண்ட் பழைய நிலைக்கு வந்து விடுவார்!
டெஸ்மாண்ட்! இதைக் கொஞ்சம் நுகர்ந்து பார்!
உடனே டெஸ்மாண்ட் எழுந்து உட்கார்ந்தார்.
சார்! என்ன நடந்தது!
பயப்படும்படி ஒன்றும் நடக்க வில்லை!
டெஸ்மாண்ட் எதுவுமே நடக்கவில்லை!
இல்லை ஏதோ விபரீதம் நடந் திருப்பது போலத் தெரிகிறது!
சார்! நான் ஏதோ தவறு செய்து விட்டதைப் போல எண்ணுகிறேன்!
அதெல்லாம் ஒன்றுமில்லை டெஸ்மாண்ட்! முதலில் உனக்கு ஒய்வு தேவை!

டெஸ்மாண்ட்! கமிட்டி ஹாலுக்கு போய் சில நாள் ஓய்வெடுத்து விட்டு வா!
ரொம்ப நன்றி சார்! உங்களுடைய வற்புறுத்தலுக்காக ஏற்றுக்கொள்கிறேன்!
டெஸ்மாண்ட் பதட்டப்படாதீர்கள்! பிரச்சினைகளை கெர்பி சமாளித்துக் கொள்வார்!
நான்தான் அவருக்கு வீணாக தொல்லை கொடுத்துவிட்டேன்!
டெஸ்மாண்ட்டை கமிட்டி ஹாலுக்கு அழைத்து வந்தார்கள்.
பேசாமல் உள்ளே ஓய்வு எடுங்கள்! எல்லாம் சரியாகிவிடும்!
ஓ.கே.! முயற்சி செய்து பார்க்கிறேன்!

இங்கே வைத்துத் தான் மெர்லின் உங்களை படம் பிடித்தான் நினைவு இருக்கிறதா?
ஆமாம்! என் கடிகாரத்தைக்கூட கழற்றிக் கேட்டான்
நானும் கழற்றிக் கொடுத்து விட்டேன்!
இதையே பாருங்கள் என்று என் முன் கடிகாரத்தை ஆட்டினான்!
எங்கே கொடுங்கள் பார்ப்போம்!
டெஸ்மான்ட் கடிகாரத்தைக் கொடுத்தார்
இதே கடிகாரம் தானா?
ஆமாம்! இதுதான்!
இப்படித்தான் என்முன் காட்டினான்!
நன்றாக பாருங்கள்! அவன் உங்களிடத்தில் என்ன சொன்னான்! ஒன்றுவிடாமல் சொல்லுங்கள்!
எட்வர்டு டெஸ்மான்ட்டை மீண்டும் வசியப்படுத்தினார்.

இரகசிய குறிப்பை எடுத்துத் தரும்படி மெர்வின் என்னிடம் கட்டளையிட்டான்:
எங்கே விளக்கமாக சொல்லுங்கள்!
ரிப்கெர்பியின் லாக்கரை திறந்து கிறிஸ்டோபர் பற்றிய இரகசிய குறிப்பை எடுத்து அவர்களுக்கு போன் செய்தேன்!
ம்... மேலும் சொல் லுங்கள்!
அடுத்து என்ன செய்தீர்கள்!
அவர்கள் கொடுத்த நெக்லசை மெகர்பியின் லாக் கரில் வைத்தேன்!
நீங்கள் செய்ததில் இதுதான் மிகப் பெரிய தவறு!
சரி! பழைய நிலைக்கு வாருங்கள்!
மயக்கத்தில்
இருந்து மீண்டார்.
நான் ஏதும் தவறாக உளறி வைத்தேனா!
இல்லை ஒரு பெரிய உண்மை யைச் சொல்லி யிருக்கிறீர்கள்

மெர்லின் உங்களை வசியப் படுத்தி காரியத்தை சாதித்திருக்கிறாள்!
சே! ரிப் கொர்பிக்கு எவ்வளவு பெரிய துரோகம் செய்திருக்கிறேன்!
அவருக்கு ஏற்பட்ட களங்கத்தை நான் துடைத்தே தீருவேன்!
சரி! முதலில் இதை குடியுங்கள்!
ராஸ்கல்! அந்த திருட்டு நாய்களுக்கு நான் யார் என்று காட்டுகிறேன்!
அதற்கு நான் ஒரு யோசனை சொல்கிறேன்!
அவர்கள் கொடுத்த நம்பருக்கு பழைய மாதிரியே போன் செய்யுங்கள்! என்ன நடக்கிறது என்று பார்ப்போம்!
அன்று இரவு—!
தைரியமாக பேசுங்கள்!
மெர்லினுக்கு டெஸ்மானட் போன் செய்தார்
என் குரலைக் கேட்டு மீண்டும் என்னை வசியப் படுத்திவிட்டால்...!
குரலை கொஞ்சம் உயர்த்தி முரட்டுக் குரலில் பேசுங்கள்!

மெர்லின் உனக்குத்தான் போன்:
எனக்கா?
கிறிஸ்டோபர்! டெஸ்மாண்ட்தான் பேசுகிறான்
டெஸ்மான்ட்டா? என்ன வேண்டுமாம்!
என்னிடம் எதையோ எதிர் பார்க்கிறான் என்று நினைக் கிறேன்!
நான் என்ன செய்ய வேண்டும்! உங்களின் அடுத்த கட்டளைக்காக காத்திருக்கிறேன்!
கட்டளைக்காக காத்திருக் கிறானாம்!
ஏய்! மயக்கம் தெளிந்து அவன் நம்மை மாட்டி விடப் பார்க்கிறான் என்று நினைக்கிறேன்!

பிரம்மாதம்! அசத்தி விட்டீர்கள்!
மெர்வின்தான் பேசுகிறாள்! பரவாயில் லை என் குரலை புரிந்துகொண்டு விட்டாள்!
கிறிஸ்டோபர்! அவனுக்கு என்ன பதில் சொல்ல!
பதில்தானே... விரைவில் சொல்லி விடுவோம்! முழுமை யாகவே சொல்லி விடுவோம்!
அவனை அங்கேயே இருக்கச் சொல்! நாம் போய் அவன் கதையை முடித்துவிடுவோம்!
அவன் எங்கிருந்து பேசுகிறான் என்று தெரிய வில்லையே!

எங்கு இருந்து பேசுகிறீர்கள்! அங்கேயே இருங்கள் நான் வருகிறேன்!
அவன் இங்கே வருகிறானாம்! உண்மை புலப்படப் போகிறது பார்.
ஆகா! ரிப்கோம் நம்மை பார்த்து ஆச்சரியப் படப் போகிறார்
இருவரும் சந்தோசப்பட்டுக் கொண்டார்கள்.
மெர்லின்! இப்போது வந்து விடுவாள்! நீ போய் மறைந்துகொள்!
ஓ.கே.! தக்கசமயத்தில் வந்து நான் அவளை மடக்கி விடுகிறேன்!
என் வசிய சக்தி அவனிடம் குறைந்து விட்டது என்று நினைக்கிறீர்களா?
ஆமாம்! அதனால் தான் அவனாகவே உன்னிடம் கட்டளையை எதிர்பார்க்கிறான்!
அவனுக்கு என்ன புத்தி பேதலித்துவிட்டதா? இதுவரை ஒழுங்காகத்தானே நடந்து கொண்டான்!
கிறிஸ்டோபரும், மெர்லினும் டெஸ்மான்ட்டை தீர்த்துக்கட்ட காரில் வந்தார்கள்.

சரி! நான் மறைந்து கொள்கிறேன்! என் கவனம் முழுவதும் உங்கள் மீது தான் இருக்கும்!
பயப்படாதே! அப்படி எதுவும் அசம்பாவிதம் நடக்காது!
டெலிபோன் பூத்துக்கு வந்தார்கள்.
அவனிடம் எந்தக் கட்டளையும் இட வேண்டாம்! முதலில் அவன் நம் கட்டுப் பாட்டுக்குள் இருக்கிறானா என்று பார்!
நிச்சயமாக என் சக்தி ஒரு துளிகூட குறைந்திருக்காது!
மெர்லின் நேராக டெஸ்மாண்ட் டிடம் வந்தாள்.
டெஸ்மாண்ட் நான் சொல்வதை கவனமாக கேள்.
மெர்லினின் திறமை மேல் எனக்கு நம்பிக்கை உண்டு! இருந்தாலும்...
நெக்லஸை மறந்து விடு! யார் கேட் டாலும் அதைப்பற்றி சொல்லக் கூடாது!
என்னால் மறக்க முடியாதே!

எல்லாமே என் நினைவை விட்டு அழியாமல் அப்படியே இருக்கிறது!
டெஸ்மான்ட், மெர்லினின் கையை பிடித்தார்.
இல்லை. மறந்தே ஆக வேண்டும்!
ஏய்! மரியாதையாக ரிப்கெர்பியிடம் வந்து நடந்தவற்றை விளக்கமாக சொல்...! இல்லா விட்டால்...
ஏய்...! மரியாதை யாக என்னை விடு! வீணாக உன் உயிரை இழந்து விடாதே.
டெஸ்மான்ட் அவளை வலுக்கட்டாயமாக இழுத்தார்

முட்டாள்! என் எதிரிலேயே மெர்லினை கடத்திச் செல்லப் பார்க்கிறாயா?
தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்த கிறிஸ்டோபர் துப்பாக்கியுடன் கோபமாக இறங்கினான்.
ஏய்... மெர்லின்! நான் உன்னை கைது செய்கிறேன்!
இல்லை! என்னைவிடு! சொன்னால் கேள்!
அதற்குள்—
கிறிஸ்டோபரின் துப்பாக்கி தோட்டாக்களை உமிழத் தொடங்கிவிட்டது.
டுமீல்...
ஆ
அம்மா...!
தோட்டாக்கள் டெஸ்மான்ட உடம்புக்குள் புகுந்தன.

அப்ரூவர் ஆக
மாறியவனை எமலோகம்
அனுப்பிவிட்டேன்!
மெர்வின்!
சீக்கிரம் காரில்
ஏறு!
இருவரும் காரில் ஏறி.பறந்தார்கள்.
சார்!
என்ன
இது?
கிறிஸ்டோபரின் கார் சாலையில் சீறிப் பாய்ந்து சென்றது.

டெஸ்மான்ட் இறந்து விட்டானா?
அவன் சாகாவிட்டால் நாம் இருவரும் சிறைக்குப் போக வேண்டியதுதான்!
அய்யோ இனி நான் என்ன செய்வேன்!
அப்படியா! நீ அங்கேயே இரு! நான் ஆம்புலன்சுடன் அங்கு வருகிறேன்!
ரிப்கொர்பிக்கு தகவல் வந்தது.
கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்! ரிப்கொர்பி இப் பொழுது வந்து விடுவார்!
வீணாக அப்பாவி ஒருவனை கொன்றுவிட் டீர்களே!
அப்பாவியா! அவன்தான் நம்மை மாட்டிவைக்கும் சாட்சி! மறந்துவிடாதே!

மெர்லின் உன் வீட்டில் இரு! இதோ வருகிறேன்!
இல்லை எனக்கு பயமாக இருக்கிறது!
ஏய் இப்பொழுதுதான் ஒரு கொலை செய்திருக்கிறேன்! மீண்டும் என்னை கொலை
ரிப்கெர்பி டெஸ்மான்ட்டை காப்பாற்ற பாய்ந்து வந்தார்.
டெஸ்மான்ட் எப்படி யிருக்கிறான்!
என்ன நடந்தது! இங்கே எதற்காக வந்தீர்கள்?
அந்த புகைப்படக்காரியை பிடிக்க வந்தோம். அதற்குள் ஒருவன் டெஸ்மான்ட்டை சுட்டுவிட்டான்!

நான் மறைந்து இருந்தேன்! அதற்குள்...! சார் என்னால் அவனையும் அந்தப் பெண்ணையும் அடையாளம் காட்ட முடியும்!
மெர்லின்! பிறகு வந்து உன்னை கூட்டிச் செல்கிறேன்!
வீட்டில் பூட்டிவைத்துவிட்டு கிறிஸ்டோபர் புறப்பட்டான்.
ரோட்டில்—
வண்டியை விரைவாக ஆஸ்பத்திரிக்கு ஓட்டுங்கள்!
ஓ.கே. சார்!
டெஸ்மான்ட்! உன்னைச் சுட்டது யார்? சொல்!
சார்! அந்த அயோக்கியன் கிறிஸ்டோபர் தான்!
நான் உங்களுக்கு துரோகம் செய்து விட்டேன்!
கிறிஸ்டோபரை நான் பார்த்துக் கொள்கிறேன்.
பயப்படாதே! நான் உன்னுடனே இருக்கிறேன்!
ரொம்ப நன்றி சார்!

டெஸ்மான்ட்டை ஆப்ரேஷன் தியேட்டருக்கு எடுத்துச் சென்றார்கள்.
டாக்டர் டெஸ்மான்ட்டுக்கு எதுவும் நேர்ந்து விடக்கூடாது!
ஓ.கே.! நாங்கள் முயற்சிக்கிறோம்!
டாக்டர்! எனக்கு டெஸ்மான்ட் வேண்டும்
பயப்படாதீர்கள்! உடனடியாக அவருக்கு ஆப்ரேஷன் செய்தாக வேண்டும்!
டெஸ்மான்ட்டுக்கு....!
ஆப்ரேஷன் நடக்கிறது! கிறிஸ்டோபரை நான் விடப் போவதில்லை.
டெஸ்மான்ட்டை எச்சரிக்கையாக பார்த்துக்கொள்! நான் கிறிஸ்டோபரை தேடிச் செல்கிறேன்!

ரிப்கொர்பி காரை எடுத்துக் கொண்டு சிட்டாய் பறந்தார்.
அங்கே-
தடயம் எதையும் விட்டுச் செல்லக் கூடாது! சிறு துரும்பு கிடைத்தால் கூட ஆபத்து தான்!
கிறிஸ்டோபர் வீட்டில் உள்ள முக்கியப் பொருளை அப்புறப்படுத்திவான்.
என்ன இது? போனவரை இன்னும் காணோமே!
ஒருவேளை அவன் என்னையும் டெஸ்மான்ட்டைப் போல சுட்டுக்கொன்று விடுவானோ! அவனிடம் இருந்து எப்படியும் தப்பிவிட வேண்டும்!'
மெர்லினுக்கும் கிறிஸ்டோபர் மீது சந்தேகம் வந்தது.

ரிப்கொர்பி, கிறிஸ்டோபரை தேடி அவன் வீட்டுக்கு வந்தார்
கிறிஸ்டோபர் எப்படியும் உள்ளேதான் இருப்பான்!
கிர்கிர்கிர் ...கிர்...!
அழைப்பு மணியை அழுத்தினார்..
என்ன சத்தத்தையே காணோமே! ஒருவேளை உள்ளே பதுங்கி யிருப்பானோ!
ரிப்கொர்பி வேறு சாவி போட்டு கதவை திறந்து உள்ளே வந்தார்.
CLICK
கிறிஸ்டோபர்! மரியாதையாக சரணடைந்து விடு!

வீட்டில் விளக்கு எரிகிறது! பொருட்கள் எல்லாம் சிதறிக் கிடக்கின்றன!
கிறிஸ்டோபர் தப்பிவிட்டான்!
எப்படியும் மெர்லின் வீட்டுக்குத் தான் போவான்! இந்த டைரியில் அவள் முகவரி இருக்கலாம்!
மேசையில் கிடந்த டைரி ஒன்றை ரிப்கெர்பி எடுத்தார்.
இதோ இருக்கிறது! அடுத்து அவள் வீட்டுக்குச் செல்ல வேண்டும்!

கிறிஸ்டோபர் மெர்லின் வீட்டுக்கு வந்தான்.
இன்னும் என்ன செய்கிறாள்!
நான் தான் தயாராக இருக்கச் சொன்னேனே!
இதோ கிறிஸ்டோபர் வந்துவிட்டான். என்னை கொன்றாலும் கொன்று விடுவான்:
மெர்லின் என்னிடமிருந்து தப்பிச் செல்ல பார்கிறாளா! அவளை விடக்கூடாது!
ஏய்... மெர்லின்! கதவைத் திற! இல்லை கதவை உடைத்து உள்ளே வந்து விடுவேன்

மெர்லின்! வெளியே வந்துவிடு! நீ இல்லாமல் நான் ஒரு அடிகூட எடுத்துவைக்க மாட்டேன்!
கிறிஸ்டோபர் கதவை இடியென இடித்தான்.

மெர்லின் கோபத்தைக் கிளராதே!

அடுத்த விநாடி—
கிறிஸ்டோபர் கதவை பிளந்து கொண்டு உள்ளே வந்தான்.

வா! என்னுடன் வந்துவிடு!
இல்லை என்னை விடு! நான் உன்னுடன் வரவில்லை!
அப்போது– ரிப்கெர்பி வீட்டுக்குள் நுழைந்தார்
கிறிஸ்டோபர் அவளை விடு! இல்லை சுட்டுவிடுவேன்!

இங்கேயே
வந்து
விட்டாயா?
டுமீல்
கிறிஸ்டோபர் துப்பாக்கியை எடுத்து சுட்டான்.
டுமீல்...!
டுமீல்....
ரிப்கெர்பியும் சுட்டார்.
இந்தா
இவளை வைத்துக்
கொள்!
கிறிஸ்டோபர்
மெரலினை ரிப்கெர்பியிடம்
தள்ளிவிட்டு தப்பிக்கப் பார்த்தான்.
என்னைப்
பிடிக்க
உனனால்
முடியாது!
கிறிஸ்டோபர்.
தப்பிக்க
நினைக்காதே:
உன் உயிர்
உடலில்
இருக்காது!

நீ தான் அந்தப் பெண்ணா? டெஸ்மான்ட்டின் உயிருக்கு என்ன சொல்கிறாய்...!
சார்! டெஸ்மான்ட்டை நான் சுடவில்லை!
அப்படியானால்...!
கிறிஸ்டோபர் தான் சுட்டான்! நான் மறுத்தேன் அவன் கேட்கவில்லை!
அதற்குள் கிறிஸ்டேர்பர் மாடி வழியாக சென்று தப்பிக்க முயன்றான்.
என்னை பிடிக்கப் போகிறானாம: அதையும் பார்த்து விடுவோம்!
சார்! மாடிப்படி வழியாக போக வேண்டாம்! அவன் நமக்காக காத்திருப்பான்! வேறுவழி இருக்கிறது:

வெளிப்பக்கம் இரும்பு ஏணி இருக்கிறது! அது வழியாக செல்லலாம்!
அதுவும் நல்ல யோசனைதான்!
நீ இங்கேயே இரு! நான் போய் அவனை இழுத்து வருகிறேன்!
ஓ.கே. சார்!
கிறிஸ்டோபர் மொட்டைமாடிக்கு வந்தான்.
அடுத்த மாடி வழியாக கீழே சென்று என் காரை எடுத்துக் கொண்டு எளிதில் தப்பி விடலாம்!
கிறிஸ்டோபர் நான் வருவேன் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பான்!

மாடியில்.
ரிப்கெர்பி என்னை பின்தொடர்ந்து இந்த வழியாகத் தான் வருவான். வரட்டும்! சுட்டுக்கொன்று விடுகிறேன்!
ஆனால், ரிப்கெர்பியோ அவனுக்கு பின்னால் வந்து நின்றார்.
பாவம்! அவன் எனக்காக அங்கே காத் திருக்கிறான்!
அவனை சுடக் கூடாது! குற்றங்களை ஒப்புக்கொள்ள உயிரோடு பிடிக்க வேண்டும்!
உடனே கெர்பி துப்பாக்கியை ஒரு மூலையில் வீசினார்.
கிறிஸ்டோபர் அந்தப் பக்கம் சுடுவான்!
அதற்குள் அவன் மீது பாய்ந்து பிடித்து விட வேண்டும்!

கிறிஸ்டோபர் துப்பாக்கி விழுந்த திசையை நோக்கி சுட்டான்.
டுமீல்...!
அதற்குள் கொர்பி மின்னல் வேகத்தில் செயல்பட்டு அவன் மீது பாய்ந்தார்.
துப்பாக்கியை கீழே போடுடா!
ரிப்கொர்பி அவன் மணிக்கட்டை பிடித்து முறுக்கினார்.
துப்பாக்கி அவன் கையில் இருந்து நழுவியது.
இது டெஸ்மான்ட்டை சுட்டதற்காக இந்தா வாங்கிக் கொள்!

எழுந்திரிடா! நான் உன்னை கொல்லமாட்டேன்! நீ இப்பொழுது சாகக்கூடாது!
ஏன்டா! என் மேல் திருட்டுப் பட்டம் சூட்டுகிறாயா!
இந்தா வாங்கிக் கொள்!
கும்...!
அதற்குள், அங்கே போலீஸ் பட்டாளம் வந்து சேர்ந்தது.
ரிப்கெர்பி அதோ, மாடியில் நிற்கிறார்! வாருங்கள்!
ரிப்கெர்பி என்னை விட்டுவிடு! அடிக்காதே!
டெஸ்மான்ட் உயிருக்கு ஏதாவது நேர்ந்தது, என்றால் உன்னை உயிரோடு விடமாட்டேன்!

ஓ.கே. ரிப் கெர்பி! அவனை எங்களிடம் ஒப்படைத்து விடு.
ஆஸ்பத்திரியில்– ஆபரேஷன் நடந்து கொண்டிருந்தது.
டாக்டர் இதய துடிப்பு நன்றாக இருக்கிறது!
பரவாயில்லை டெஸ்மான்ட் பிழைத்துக் கொண்டார்!
ஆப்ரேஷன் வெற்றிகரமாக முடிந்து டெஸ்மான்ட்டை அறைக்கு கொண்டு வந்தார்கள்.
முதலில் அவனை என் கண்முன் இருந்து கொண்டு செல்லுங்கள்! இல்லை நான் அவனை கொன்றுவிடுவேன்!!
ரிப்கெர்பி, கிறிஸ்டோபரைக் கண்டு கொதித்தெழுந்தார்.

கமிஷனர் சார்! பத்திரிகை காரர்களை கூட்டி நடந்ததை விளக்கமாக சொல்லுங்கள்.
ஓ.கே. ரிப்கொர்பி!
ரிப்கொர்பி கீழே வந்தார்.
கிறிஸ்டோபரை கைது செய்துவிட்டேன்! டெஸ்மான்ட்டை சுட்டது அவன்தான் என்று நீ சாட்சி சொல்ல வேண்டும்!
கண்டிப்பாக சொல்வேன் சார்! அவன் வீட்டுக்கு வந்தால் ஏராளமான தடயங்கள் கிடைக்கும் சார்!
இப்போது கிறிஸ்டோபர் வீட்டுக்குத்தானே செல்கிறோம்!
ஆமாம்! அதைவிட எனக்கு வேறு என்ன வேலை!
மெர்லின் ரிப்கொர்பியை கிறிஸ்டோபர் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

டேப் ரிக்கார்டரில் டெலிபோன் பேச்சு பதியப் பட்டிருக்கிறதா!
ஆமா சார்! வேண்டுமானால் போட்டுப் பாருங்கள்!
ரிப்கெர்பி டேப்பை போட்டு பார்த்தார்.
டெஸ்மான்ட குரலும், நெக்லஸ் பற்றிய பேச்சு வார்த்தை எல்லாம் தெளிவாகவே இருக்கின்றன!
நல்லது! இந்த ஒன்றை வைத்தே கிறிஸ்டோபருக்குப் தண்டனை வாங்கிக் கொடுத்து விடுவேன்!
மெர்லின் நீ எனக்கு உதவியதற்காக உனக்கு தண்டனை குறைய வழி செய்கிறேன்!
ரொம்ப நன்றி சார்!
ரிப்கெர்பி டெஸ்மான்ட்டை பார்க்க ஆஸ்பத்திரிக்கு வந்தார்.
உள்ளே வாருங்கள்! டெஸ்மான்ட்டை பார்க்கலாம்!

டெஸ்மான்ட்! யார் வந்திருப்பது என்று பாருங்கள்!
டெஸ்மான்ட் உன் மூலமாகத்தான் அந்தக் கொள்ளைக்காரனை பிடிக்க முடிந்தது. மிக்க மகிழ்ச்சி!
அப்படியா சார்! ரொம்ப சந்தோசம்!
இந்த டேப்பில் கிறிஸ்டோபரை பற்றிய எல்லா இரகசிய குறிப்புக்களுமே இருக்கின்றன! அவனுக்கு சிறை நிச்சயம்!
ஒரு தேசத் துரோகியை பிடித்து கொடுப்பதற்காக நான் காயம் பட்டதை பெருமையாக கருதுகிறேன். சார்!

ஓ.கே. டெஸ்மான்ட் நன்றாக ஓய்வு எடு! விரைவில் வீட்டுக்கு திரும்பலாம்!
துணைத்தலைவர் எட்வர்டு, டெஸ்மான்ட்டை பார்க்க வந்தார்.
விரைவில் நாம் சமையல்காரர் கூட்டத்தின் கமிட்டி கூட்டத்தை கூட்டி புதிய திட்டங்களை அமுல்படுத்தலாம்!
நிச்சயமாக அதில் என்ன சந்தேகம்!
சில வாரங்களுக்குப் பிறகு– டெஸ்மான்ட் ஆஸ்பத்திரியில் இருந்து வீடு திரும்பினார்.
சார்! நீங்கள் நன்றாக குணமடைந்து வீட்டுக்கு போவதில் மிக்க மகிழ்ச்சி!
உன் அன்பான கவனிப்புக்கு நான்தான் நன்றி சொல்ல வேண்டும்!
டெஸ்மான்ட் வீட்டில் உனக்கு நல்ல உபசரிப்பு காத்திருக்கிறது.
சார்! காபி ரெடி சார்!
எடுத்துக் குடி! கொஞ்ச நாளைக்கு நாங்கள் உனக்கு உதவியாளராக இருக்கிறோம்!
சார்! அதெல்லாம் வேண்டாம்!
(முடிந்தது)

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)
Regd. No. TN/MS(N)/461
பொங்கல் மலர்
அடுத்த காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
முதலைத் தீவு
முதலைத் தீவுக்குள் நுழைகிறவர்கள்
வெறித்தனமாக சுட்டுக்கொல்லப்படுகிறார்கள்! ஏன்?
வியக்க வைக்கும் மர்மப் படக்கதை!
அதிகப் பக்கங்கள்
ஆனால் அதே விலை!
ஜனவரி 16-ந்தேதி வெளிவ
"ராணி காமிக்ஸ்", சென்னை-600 00